IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.259/2016
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 1.15p.m.

வா.சா. 2 சாட்சி வேடச்சி க.பெ.பாண்டி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 26.03.2026 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எந்த ஊரில் இருக்கிறேன் என்றால் குராயூர் ஆகும். நான் யாருக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் எனது பங்காளி பேத்திக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் பெயர் மும்தாஜ் மற்றும் மாரியம்மாள் ஆகும். மேற்படி நபருக்கு எங்கெங்கு சொத்துக்கள் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், எனது பங்கு சொத்திற்கு அருகில் உள்ளது.

2. எனது பங்குச்சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எந்த சர்வேஎண், எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. எனது நிரூபணவாக்குமூலத்தில் என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவர்கள் உழவு செய்து வரும் சொத்து உண்மையானதா என்று கேட்டார்கள், அதை தவிர்த்து வேறுஎதுவும் தெரியாது.

3. எனது நிரூபணவாக்குமூலத்திற்கு நீதிமன்றத்தில் விபரம் கூறினேன், வேறு எங்கும் விபரம் தெரிவிக்கவில்லை. நான் மாரியம்மாள், மும்தாஜ் தயாரித்து வைத்திருந்த முதல்விசாரணையில் கையெழுத்து

செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நபர்களுக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியமானது என்று தெரியுமா என்றால் பாட்டனார் சொக்கலான் சொத்தாகும். பாட்டனார் சொக்கலானுக்கு என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்றால் எனக்கு தெரியாது.

4.வழக்குச்சொத்திற்கு சொக்கலான் பெயரில் உள்ள ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வாதிகள் உறவினர் என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:1.25 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.26 17:41:23 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.